**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.54/2021 இற்கான குறிப்பறிக்கை</u>**

1. D. கிருஷ்ணமூர்த்தி,
2. D. தியாகராஜன்
3. D. மைதிலி
4. D. கீதா

....மனுதாரர்கள் /வாதிகள்

/ எதிர் /

1. P. கோவிந்தசாமி பிள்ளை
2. V. ஏகநாதன்
3. V. கண்ணன்
4. பிரேமா
5. சாமுண்டீஸ்வரி
6. ஹேமலதா
7. சுசீலா
8. B. பொன்னம்மாள்
9. அலமேலு
10. தேவி

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:07 +0530

இந்த குறிப்பறிக்கையானது இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் 12.02.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. S. சதாசாரம், V. பிரேம்குமார் மற்றும் V.S. ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. R. தஞ்சன் மற்றும் D. சுந்தரவடிவேலு ஆகியோர் முன்னிலையாகியும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் / 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. N.R. ஆனந்த ராம கிருஷ்ணன் மற்றும் S. ரேணுகா தேவி ஆகியோர் முன்னிலையாகியும், 8ம் எதிர்மனுதாரர் / 8ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. R. மீனாட்சி அவர்கள் முன்னிலையாகியும், 9ம் எதிர்மனுதாரர் / 9ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. M.R. பிரமிலா மற்றும் T. ஹரி ஹர சுதன் ஆகியோர் முன்னிலையாகியும் மற்றும் 10ம் எதிர்மனுதாரர் / 10ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இக்குறிப்பறிக்கை மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.54/2021 மற்றும் அசல் வழக்கு எண்.685/2022 ஆகிய இவ்விரு வழக்குகளையும் சேர்த்து விசாரணை செய்ய அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:13 +0530

2. <u>மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்த குறிப்பறிக்கையின் சுருக்கம்:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். மனுதாரர்கள் / வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கு எண்.54 / 2021ல் பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோர், இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.685 of 2022 என்ற எண்ணில் மற்றொரு வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இவ்விரு வழக்குகளிலும் முரண்பட்ட தீர்ப்புகள் ஏற்படுவதை தவிர்க்க, இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரித்து, பொதுவான சாட்சியங்களை பதிவு செய்வது அவசியமாகும். எனவே அசல் வழக்கு எண்.54/2021 மற்றும் அசல் வழக்கு எண்.685/2022 ஆகிய இவ்விரு வழக்கில் பொதுவாக விசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. <u>2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் / 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம் :–</u>

நடப்பு அசல் வழக்கு எண்.54/2021 1 முதல் 7 அட்டவணை சொத்துகளின் பாகப்பிரிவினைக்கானதாகும். இவ்வழக்கில் 2 மற்றும் 3–ம் பிரதிவாதிகளே, அசல் வழக்கு எண்.685/2022 என்ற வழக்கில் வாதிகளாவர். அசல் வழக்கு எண்.685/2022–ல் உள்ள சொத்து பொருள் எண்.1, இந்த வழக்கில் (அசல் வழக்கு எண்.54/2021) உள்ள சொத்து பொருள் எண்.4–க்கு இணையானதாகும். அந்த வழக்கில் (அசல் வழக்கு எண்.685/2022), அவர்கள் 1967–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29–ம் தேதி கிருஷ்ணவேணி அம்மாளால் வீரசாமிப் பிள்ளைக்கு (இவரிடமிருந்தே இந்த பிரதிவாதிகள் 2 & 3 உரிமை கோருகின்றனர்) எழுதப்பட்ட உயில் மூலம்,

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:19 +0530

குறிப்பிட்ட சொத்தின் மீது தனியுடைமை உரிமை கோரி, உரிமை அறிவிப்பு, ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் தடையுத்தரவு உள்ளிட்ட உத்தரவுகளைக் கோரியுள்ளனர். அசல் வழக்கு எண்.54/2021–ல், 2 & 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். அதில், சொத்து பொருட்கள் 1, 2, 3, 5, 6 மற்றும் 7 ஆகியவற்றின் பிரிவினைக்கு ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தச் சொத்துக்களில் தங்களுக்கு 7/24 பங்கு இருப்பதாகக் கூறி, அதற்கான நீதிமன்றக் கட்டணமும் செலுத்தியுள்ளனர். ஆனால், வழக்கு சொத்து அட்டவணை எண்.4–ஐப் பொருத்தவரை, வாதிகள் கோரும் பிரிவினை உரிமையை இவர்கள் மறுக்கின்றனர். அசல் வழக்கு எண்.685/2022–ல் தனிப்பட்ட விசாரணைச் சிக்கல்கள் மற்றும் நிலுவையில் உள்ள இடைக்கால மனுக்கள் இருப்பதால், இரு வழக்குகளுக்கும் தனித்தனியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, சட்டத்தின்படி இரு வழக்குகளுக்கும் தனித்தனியாக சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் நிபந்தனையின் அடிப்படையில், இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரிப்பதற்கு 2 & 3 பிரதிவாதிகள் ஒப்புக்கொள்கின்றனர்.

**4.** இக்குறிப்பறிக்கையில் 1, 8 மற்றும் 9 ம் எதிர்மனுதாரர்கள் / 1, 8 மற்றும் 9 ம் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அசல் வழக்கில் 10 ம் எதிர்மனுதாரர் / 10 ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜரின்மையால் 07.06.2022 அன்று தோன்றாத்தரப்பினராக அறிவிக்கப்பட்டனர்.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:24 +0530

5. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இந்த குறிப்பறிக்கையில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

6. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

<u>பிரச்சனை:–</u>

7. இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார். மனுதாரர்கள் / வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலைலியில் மனுதாரர்கள் / வாதிகள் இக்குறிப்பறிக்கையை தாக்கல் செய்து இந்த அசல் வழக்கு எண்.54 / 2021ன் பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோர், இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.685 / 2022 என்ற எண்ணில் மற்றொரு வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்விரு வழக்குகளிலும் முரண்பட்ட தீர்ப்புகள் ஏற்படுவதை தவிர்க்க, இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரித்து, பொதுவான சாட்சியங்களை பதிவு செய்வது அவசியம் என்றும் எனவே அசல் வழக்கு எண்.54/2021 மற்றும் அசல் வழக்கு எண்.685/2022 ஆகிய இவ்விரு வழக்கில் பொதுவாக விசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.54/2021–ல், 2 & 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:30 +0530

செய்துள்ளனர் என்றும் வழக்கு அட்டவணை சொத்துக்கள் 1, 2, 3, 5, 6 மற்றும் 7 ஆகியவற்றின் பிரிவினைக்கு ஒப்புக் கொள்வதாக தெரிவித்து இந்தச் சொத்துக்களில் தங்களுக்கு 7/24 பங்கு இருப்பதாகக் கூறி, அதற்கான நீதிமன்றக் கட்டணமும் செலுத்தியுள்ளனர் என்றும் ஆனால், வழக்கு அட்டவணை சொத்து எண்.4-ஐப் பொருத்தவரை, வாதிகள் கோரும் பிரிவினை உரிமையை இவர்கள் மறுப்பதாகவும், அசல் வழக்கு எண்.685/2022-ல் தனிப்பட்ட விசாரணைச் சிக்கல்கள் மற்றும் நிலுவையில் உள்ள இடைக்கால மனுக்கள் இருப்பதால், இரு வழக்குகளுக்கும் தனித்தனியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் எனவே, சட்டத்தின்படி இரு வழக்குகளுக்கும் தனித்தனியாக சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் நிபந்தனையின் அடிப்படையில், இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரிப்பதற்கு ஒப்புக்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் முன்னிடப்பட்டுள்ள பொருண்மைகளை பரிசீலிக்கும் போது இருவழக்குகளிலும் ஒரே நேரத்தில் தனித்தனியாக சாட்சிய விசாரணை மேற்கொள்வது நீதி நலனுக்கு உகந்ததாக அமையும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இக்குறிப்பறிக்கையை பகுதியாக ஏற்பதென முடிவு செய்கிறது.

முடிவில், இக்குறிப்பறிக்கையை பகுதியாக ஏற்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:36 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:42 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:59:48 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>
**அசல் வழக்கு எண்.54/2021**
**இற்கான குறிப்பறிக்கை**
**நாள் 12.03.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**